கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

STC No.38/2023

நாள்.12.09.2025 ம.சா.1 திரு.அசோக்

த/பெ திரு.சொக்கலிங்கம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) எனது புகார் மனுவில் 24.12.2021 அன்று எதிரி என் வீட்டில் சந்தித்து பணம் கேட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் அடிக்கடி காவல் நிலையம் செல்லும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. என்மீது 03.12.2021 அன்று எதிரியின் கணவர், எதிரி, எதிரியின் கணவர், எதிரியின் பிள்ளைகளை காரில் கடத்தி எதிரியின் காசோலை, Pro note, பிள்ளைகளின் பிறப்பு சான்று, ஆதார் கார்ட், ரேசன் கார்ட் என அனைத்தையும் பறித்துவிட்டார் என புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பொய் புகார் ஆகும். மேற்படி புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, என்னை விசாரிக்கவில்லை.

2) நான் மேற்படி புகார் தொடர்பாக 03.12.2021 ல் காவல் நிலையத்தில் ஆஜர் ஆனேன் என்றால் சரியல்ல. காவல் அதிகாரியின் அறிவுரையின் கீழ் காசோலையில் கையெழுத்து பெற்று, மற்ற ஆவணங்களை திருப்பி அளித்தும் எதிரியின் காரை தன்வசம் இதுவரை வைத்துள்ளீர் என்றால் சரியல்ல. மேற்படி புகார் மனுவின் எண்.692/2021 ஆகும் என்றால் சரியல்ல.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.12 17:06:03 +0530

3) நான் அரசியல் வாதி என்றால் பஞ்சாயத்து துணை தலைவராக இருந்து வருகிறேன். அரசியல் கட்சியில் பொறுப்பில் இருக்கிறேன் எ்ன்றால் சரிதான். எதிரியின் கணவர் கொடுத்த புகார் சம்பந்தமாக நிகழ்வில் சிதம்பராபுரம் பால்குமார், இருக்கன் துறை பகவதியப்பனும் உடன் இருந்தனர் என்றால் அப்படியொரு சம்பவம் நடைபெறவில்லை. பழவர் காவல் நிலைய அதிகாரியை விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எதிரியின் வண்டி TN 72 AB 3273 காரை தற்போது நான் தான் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) மேற்படி எதிரி மற்றும் எதிரியின் கணவர், அவர்களது பிள்ளைகளை கடத்தி சென்ற பின்பு அதாவது 01.12.2021 க்கு முன்பாக மேற்படி கார் ஆனது என் கைவசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. கடந்த 24.12.2021 ம் தேதி எதிரி என்னிடம் வந்து 6 லட்சம் கடன் கேட்டார் என்பது பொய் என்றால் சரியல்ல, அவர் வந்து கடன் வாங்கி சென்றார். எனது மிரட்டலுக்கு பயந்து தான் எதிரி மற்றும் அவரது குடும்பத்தினர்கள் வெளியூரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எதிரி காவல் கிணறு ஊரில் வசித்து வருகிறார் என்பது எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

5) எதிரி காவல் கிணறு ஊரில் வசிப்பது தெரிந்தே தான் வேறொரு முகவரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல, எதிரி என்னுடைய Class mate ஆவார், அவரது சொந்த ஊர் எனது தாயார் ஊர் ஆகும், அந்த முகவரிக்கு தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். எதிரி என்னிடம் கொடுத்ததாக கூறும் காசோலையில்



MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.12 17:06:08 +0530

உள்ள கையொப்பத்தை நான் மிரட்டி வாங்கினேன் என்றால் சரியல்ல, எதிரி வரும் போதே காசோலையை நிரப்பி தான் கொண்டு வந்தார். வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்தை தவிர மற்ற விபரங்களை நான் தான் நிரப்பினேன் என்றாலும், மேற்படி மற்ற கையெழுத்துக்கள் எதிரியினுடையது அல்ல என்றாலும் சரியல்ல, காசோலையை நிரப்பி தான் கொண்டு வந்தார். எதிரி எந்தவித பணமும் பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்தவித காசோலையும் தரவில்லை என்றால் சரியல்ல.

6) எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. எதிரி எனக்கு பயந்து தான் வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல, எதிரியை நான்கு நாட்களுக்கு முன்பு கூட பார்த்தேன், வழக்கு பணத்தை திருப்பி தருவதாக கூறினார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி குற்றமற்றவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.12 17:06:13 +0530